மின்னஞ்சல் மூலம்

**தமிழ்நாடு பதிவுத்துறைத்தலைவர்(முழு கூடுதல் பொறுப்பு) நடவடிக்கைகள்,**
**சென்னை 28**
**முன்னிலை: திரு.கா.பாலச்சந்திரன் இ.ஆ.ப.,**

**எண்:6645/கே2/2019-1 நாள்:16.09.2019**

பொருள்: பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி- இளநிலை உதவியாளர்கள்- நேரடி நியமனம் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 தேர்வாணைய தொகுதி IV தேர்வின் மூலம் நியமனம் வழங்கப்பட்டது - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவங்குதல் - ஆணை பிறப்பிக்கப்படுகிறது

பார்வை: 1.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.1152/PSD-H1/2019 நாள்.13.02.2019 மற்றும் 28.02.2019.
2.பதிவுத்துறைத்தலைவர் ஆணை எண்.6645/கே2/2019 நாள்.20.02.2019 மற்றும் 01.03.2019..

*****

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 தொகுதி IV தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு, பார்வை-1ல் காணும் தேர்வாணையக் கடிதங்களின்படி பதிவுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை-2ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் ஆணைகளின்படி, இளநிலை உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள, இணைப்பில் காணும் இளநிலை உதவியாளர்களின் பணியை இவர்கள் பணியில் சேர்ந்துள்ள நாளான கலம்-5-ல் காணும் நாள் முதல் வரன்முறை செய்தும், தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32(a)(i)ன்படி, இவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலத்தை நிறைவு செய்ய வேண்டும் என தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

2. 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 தொகுதி IV நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வில் நிலுவையாக உள்ள நீதிப்பேராணை மனுக்களின் விளைவுகளுக்குட்பட்டு இவர்களது பணி வரன்முறை செய்யப்படுகிறது.

3. இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்களுக்கும் முதுநிலைக்கும் தொடர்பில்லை. தேர்வாணையத்திடமிருந்து முதுநிலை குறித்து பட்டியல் பெறப்பட்ட பின்னரே இவர்களின் முதுநிலை விவரம் நிர்ணயிக்கப்படும்.

4. இவர்கள் இரண்டாண்டுப் பணிக்காலத்தையும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியையும் நிறைவு செய்த பின்னர், தகுதிகாண்பருவம் நிறைவு செய்வதற்கான கருத்துருவை அனுப்பி வைக்கவும், பணிவரன்முறை / தகுதிகாண் பருவம் துவக்கப்பட்டது தொடர்பாக பணிப்பதிவேட்டில் உரிய குறிப்புகள் மேற்கொள்ளவும், சம்மந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள் கோரப்படுகிறார்கள்.

ஒம்./-16.09.2019
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணையின்படி/

18/9/19
மாவட்டப்பதிவாளர்
18/9/19

பெறுநர்:
சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர்கள்,
(சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள் மூலம்)

நகல்:
1. சம்பந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர்கள்/துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்
2. அ4 இருக்கையாளர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
3. முக்கிய ஆணைக் கோப்பு / தனிநகல்-1

| | | | | |
|---|---|---|---|---|
| 116 | S.மனோகரன் | செய்யாறு | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 117 | V.சந்தியா | கோயம்புத்தூர் | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 118 | M.சுவேதா | காஞ்சிபுரம் | 27.02.2019 பி.ப. | 27.02.2019 பி.ப. |
| 119 | M.சங்கர் | கன்னியாகுமரி | 01.03.2019 மு.ப. | 01.03.2019 மு.ப. |
| 120 | A.பிரபுகுமார் | திருப்பூர் | 07.05.2019 மு.ப. | 07.05.2019 மு.ப. |
| 121 | U.சிவச்சந்திரன் | கன்னியாகுமரி | 01.03.2019 மு.ப. | 01.03.2019 மு.ப. |
| 122 | S.தேவசுந்தரம் | விருத்தாச்சலம் | 01.03.2019 மு.ப. | 01.03.2019 மு.ப. |
| 123 | S.கிருஷ்ணகுமார் | கோயம்புத்தூர் | 01.03.2019மு.ப. | 01.03.2019மு.ப. |
| 124 | D.பால்ராஜ் | பழனி | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 125 | U.சதீஷ்குமார் | கன்னியாகுமரி | 01.03.2019 மு.ப. | 01.03.2019 மு.ப. |
| 126 | R.ரமேஷ் | செங்கல்பட்டு | 28.02.2019 மு.ப. | 28.02.2019 மு.ப. |
| 127 | M.கீதா | திருப்பூர் | 01.03.2019மு.ப. | 01.03.2019மு.ப. |
| 128 | K.விமல்ராஜ் | செங்கல்பட்டு | 04.03.2019 மு.ப. | 04.03.2019 மு.ப. |
| 129 | S.சின்னப்பன் | கன்னியாகுமரி | 01.03.2019 மு.ப. | 01.03.2019 மு.ப. |
| 130 | K.பாலகுரு | மதுரை (வடக்கு) | 06.03.2019 மு.ப. | 06.03.2019 மு.ப. |
| 131 | V.பிரகாஷ் | கன்னியாகுமரி | 01.03.2019 மு.ப. | 01.03.2019 மு.ப. |
| 132 | R.பொன்சுடர் | சிவகங்கை | 01.03.2019 மு.ப. | 01.03.2019 மு.ப. |
| 133 | P.தீபிகா | ஈரோடு | 03.04.2019 மு.ப. | 03.04.2019 மு.ப. |
| 134 | G.இராஜேஷ்குமார் | கும்பகோணம் | 28.02.2019 மு.ப. | 28.02.2019 மு.ப. |
| 135 | A.தனுஜா | சேரன்மகாதேவி | 01.03.2019 பி.ப. | 01.03.2019 பி.ப. |
| 136 | A.புஷ்பா | திருவண்ணாமலை | 27.02.2019 மு.ப. | 27.02.2019 மு.ப. |
| 137 | S.கோகுல்ராஜ் | காஞ்சிபுரம் | 27.02.2019 பி.ப. | 27.02.2019 பி.ப. |
| 138 | G.சிவசக்திமுருகன் | கன்னியாகுமரி | 01.03.2019 மு.ப. | 01.03.2019 மு.ப. |
| 139 | N.வினிதா | காஞ்சிபுரம் | 01.03.2019 பி.ப. | 01.03.2019 பி.ப. |

2/12/2022

சார்பதிவாளர்
இராஜாக்கமங்கலம்